**<u>அசல் வழக்கு எண்.14/2020</u>**

26.09.2024

**பெயர் – ஜெயக்குமாரி (Pw1)**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

(1) க.ச.497/7 ல் உள்ள பு.ஏ.6.09 பூமிகளைப் பொறுத்து எனக்கு திருமணமான 1995ம் ஆண்டுகளுக்கு முந்தைய விவரங்கள் நேரடியாக தெரியாது என்றால் தெரியாது விவரம் தெரியும். வா.சாஆ.4 குத்தகை ரத்து ஆவணத்தில் உள்ள வாசகங்கள் உண்மைதான். வா.சா.ஆ.4 குத்தகை ரத்து ஆவணத்தில் என் கணவரும் ஒரு தரப்பினர் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் பு.ஏ.3.04 ½ பூமி எனது கணவரின் சுவாதீனத்தில் இருப்பதாக கூறி துரைசாமி கவுண்டர் மீது வழக்கு தாக்கல் செய்தார் என்றால் என் கணவர் சுவாதீனத்தில் இருந்தார் ஆனால் துரைசாமி கவுண்டர் மீது வழக்கு தாக்கல் செய்யவில்லை. என் கணவர் மீதும் துரைசாமி கவுண்டர் சுவாதீனத்தில் இருப்பதாக கூறி வழக்கு தாக்கல் செய்யவில்லை. துரைசாமி கவுண்டர் சுவாதீனத்திலும் இல்லை, குத்தகைதாரராகவும் இருந்ததில்லை என்றால் 1977 ம் ஆண்டு முதல் 1987 ம் ஆண்டு வரை துரைசாமி கவுண்டர் பு.ஏ..04 ½ ஏக்கரில் குத்தகைதாரராக இருந்தார். வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள விவரங்களை தெரிந்து தான் சுப்பே கவுண்டர் மகன் பழனிச்சாமி சாட்சி கையொப்பம் செய்ததாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணம் பற்றியோ அதில் பழனிச்சாமி கவுண்டர் கையொப்பம் செய்தது பற்றியோ எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சொல்லி கேட்டுள்ளேன். நேரடியாக நான் பார்க்கவில்லை.

(2) வா.சா.ஆ.4 குத்தகை ரத்து பத்திரத்தில் பழனிச்சாமி கவுண்டரின் கையொப்பத்தை பிரதிவாதிகள் மறுத்துள்ள நிலையில் நான் அதை நிரூபணம் செய்ய கையெழுத்து நிபுணரின் ஆய்வுக்கு அனுப்ப கோரவில்லை என்றால் நீதிமன்றத்திலேயே பதிவு குத்தகை சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். குத்தகை பத்திரமும், குத்தகை ரத்து பத்திரமும் பூமியில் வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக பெயரளவில் ஏற்படுத்தப்பட்ட நிபமாண ஆவணங்கள் என்றால் சரியல்ல. அந்த ஆவணம் அமுலுக்கு வரவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 4 ஆவணம் ஏற்படுத்தப்பட்டது பிறகு எனது

கணவரும், அவரது சகோதரியும் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பொதுவில் கூட்டாக பாத்தியப்பட்ட பூமிகனை எனது கணவரின் சகோதரி ரேவதி அவருக்குண்டான கூட்டு பாகத்தை எனது கணவருக்கு விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். **மேற்படி 07.06.2004 தேதியிட்ட பாக பாத்திய விடுதலை ஆவணம் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

(3) மேற்படி பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் க.ச.எண். 497/7 நெ.காலையில் பு.ஏ.6.09 இதில் பொதுவில் சரிபாதி பு.ஏ.3.04 ½ இதில் பொதுவில் சரிபாதி பு.ஏ.1.52 ¼ உள்ள பூமியைத் தான் என் கணவருக்கு என் கணவரின் அக்கா ரேவதி எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். என் கணவருக்கும், அவரது அக்காவிற்கும் வந்த பாகத்தை தான் என் கணவரின் அக்கா எழுதிக் கொடுத்தார். மேற்படி ஆவணத்தில் பூமி பொதுவில் சரிபாதி என்றும், திசை கண்டு பூமி பிரிபட்டு காண்பிக்கப்படாமலும், செக்கு பந்தி காண்பிக்காமலும் எவ்வித தட வசதி இல்லாமலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல 1977 ம் ஆண்டிலேயே திசைகண்டு, செக்குபந்தி கண்டு எழுதப்பட்டுள்ளது. பு.ஏ.3.04 ½ பூமி திசை கண்டு எழுதப்படவில்லை பொதுவில் சரிபாதி என்று கண்டு எழுதப்பட்டுள்ளது நான் வழக்கிற்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே குத்தகை ஆவணத்திலும், குத்தகை ரத்து ஆவணத்திலும் பூமி திசை கண்டு எழுதியிருந்தால் பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் திசை கண்டு எழுதியிருக்கும் பூமி திசை கண்டு எழுதாத காரணத்தினால் தான் இந்த ஆவணத்திலும் அவ்வாறு எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. மேலும் பூமியை வில்லங்கம் செய்ய வேண்டும் என்ற எண்ணதில் வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல.

(4) பி.வா.சா.ஆ.4 ஆவணம் ஏற்படுத்தப்பட்டதற்கு பிறகு என் கணவர் எனக்கு எழுதி வைத்த வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தப்பட்டது வரை இடையில் எந்த ஆவணமும் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தின்படி பு.ஏ.1.52 ¼ பூமி தான் என் கணவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். என் கணவர் வா.சா.ஆ.1 ஆவணத்தில் பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் அவருக்கு ஏற்படுத்தி வைத்த சொத்தை விட அதிகமாக எனக்கு வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி 3.04 ½ ஏக்கர் பூமியை என் பெயருக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ஏனென்றால் என் கணவருக்கு வந்த 1.52 ¼ என் கணவரின் அக்காவிற்கு வந்த 1.52 ¼ ஏக்கரும் சேர்த்து எனக்கு எழுதி வைத்துள்ளார்.

என் கணவருக்கும், என் கணவரின் அக்கா ரேவதிக்கும் சேர்த்து மொத்தமாகவே 1.52 ¼ செண்ட் தான் பாத்தியம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. சுப்பே கவுண்டர் மகன் பழனிச்சாமி கவுண்டருக்கு பி.வா.சா.ஆ.3 பாகப்படி வந்த பு.ஏ.3.04 ½ ஏக்கர் சொத்துக்களை அவரது மகனான பாலசுப்பிரமணியத்திற்கு 26.09.2008 ம் தேதி செட்டில்மெண்ட் செய்து வைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்திலும் பொதுவில் சரிபாதி பு.ஏ.3.04 ½ ஏக்கர் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை அவர்கள் பூமியைத் தான் எழுதி வைத்துள்ளார்கள். **மேற்படி 26.09.2008 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் பி.,வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

(5) மேற்படி ஆவணத்திலும் பு.ஏ.3.04 ½ பூமி செக்கு பந்தி காணாமலும், பூமி திசை கண்டு பிரிபடாமலும் காணப்படுகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பாலசுப்பிரமணியத்திற்கு பி.வா.சா.ஆ.5 ன் படி பாத்தியப்பட்ட பூமியில் பு.ஏ.1.52 ¼ பூமியை 2ம் பிரதிவாதி பொன்மணியின் கணவர் ஆறுமுகத்திற்கு 09.07.2009 ல் கிரையம் செய்துகொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்திலும் க.ச.491/7 ல் உள்ள பு.ஏ.6.09 பூமிக்கு பொதுவில் ¼ பங்கு பு.ஏ.1.52 ¼ என்று தான் எழுதப்பட்டுள்ளது என்றால் அவர்கள் பூமிக்கு அவர் எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி ஆவணத்திலும் பூமி செக்கு பந்தி காணாமலும் பூமி திசை கண்டு பிரிக்கப்படாமலும் பொதுவில் சரிபாதி என்று தான் எழுதப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆறுமுகம் 16.09.2011 ம் தேதி மேற்படி சொத்துக்களை தனது மனைவி பொன்மணிக்கு (2ம் பிரதிவாதி) செட்டில்மெண்ட் செய்து வைத்தார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்திலும் பூமி செக்கு பந்தி காணாமலும் பூமி திசை கண்டு பிரிக்கப்படாமலும் பொதுவில் சரிபாதி என்று தான் எழுதப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பாலசுப்பிரமணியம் 1ம் பிரதிவாதி ஜெயந்திக்கு 16.09.2011 ம் தேதி பு.ஏ.1.52 ¼ பூமியை செட்டில்மெண்ட் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்திலும் பூமி செக்கு பந்தி காணாமலும் பூமி திசை கண்டு பிரிக்கப்படாமலும் பொதுவில் சரிபாதி என்று தான் எழுதப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

(6) க.ச.497/7 ல் உள்ள பு.ஏ.6.09 பூமியில் 1ம் பிரதிவாதி ஜெயந்திக்கு பு.ஏ.1.52 ¼ பூமி பாத்தியம் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கும் பு.ஏ.1.52 ¼ பூமி பாத்தியம் என்றால் சரிதான். செல்வாம்பாள், லதா, சாவித்திரி, தாரணி ஆகிய நான்கு பேருக்கும் சேர்த்து

பு.ஏ.1.52 ¼ பாத்தியம் என்றால் சரிதான். எனது கணவருக்கு 1.52 ¼ பாத்தியம் என்றால் சரிதான். செல்வாம்பாள், லதா, சாவித்திரி, தாரணி ஆகியோர்களின் பூமியைப் பொறுத்து என் கணவர் சுவாதீனம் பெற்றதற்கு உண்டான எழுத்து மூலமாகவோ, பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் மூலமோ ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல எழுதிக்கொடுத்துள்ளார்கள். எந்த தேதி, மாதம், வருடம் ஏற்படுத்தப்பட்டது அதன் ஆவண எண். என்ன என்றால் 1977 ம் ஆண்டு ஆவணம் மூலம் என் கணவருக்கு பாத்தியப்பட்டது தேதி, மாதம் ஞாபகம் இல்லை. மேற்படி ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. செல்வாம்பாள் வகையறா என் கணவருக்கு எந்த ஆவணமும் ஏற்படுத்திக்கொடுக்கவில்லை என் கணவர் சட்டத்திற்கு புறம்பாக செல்வாம்பாள் வகையறா பூமியை சேர்த்து எனக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. அவர்களுடைய பூமியின் சர்வே எண். 497/5, 497/10, 499/2 போன்ற காலைகளில் அவர்களுக்கு ஒதுக்கிவிட்டு செல்வாம்பாள், சாவித்திரி, லதா, தாரணி ஆகியோரிடமிருந்து இந்த பூமியை வாங்கினார்.

(7) எனது கணவர் மேற்படி செல்வாம்பாள் வகையறா பூமிகளை பெற்று சர்வே எண். 497/5, 497/10, 499/2 காலைகளில் உள்ள பூமியை கொடுத்ததற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 13.04.2022 தேதியிட்ட இணைய வழி சிட்டா நகலில் க.ச.497/7 ன் செல்வாம்பாள், சாவித்திரி, லதா, தாரணி ஆகியோர்கள் பெயர்கள் உள்ளது என்றால் சரிதான். **மேற்படி சிட்டா பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி**.வா.சா.ஆ.6 ன் அடிப்படையில் மேற்படி பூமி எங்கள் பெயருக்கு வரவில்லை என்றால் சரியல்ல வந்துள்ளது. எனது கணவர் தாவாச் சொத்துக்களை பொறுத்து எந்த தேதியில் எனக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் 2012 ம் ஆண்டு எழுதி வைத்தார். பி.வா.சா.ஆ.4 ஆவணம் ஏற்படுத்தப்பட்ட 2004 ஆண்டிற்கு பிறகு வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தப்பட்ட 2012 ம் ஆண்டு வரை பு.ஏ.3.04 ½ யை பொறுத்து என் கணவர் பெயரில் தனிப்பட்டா எதுவும் வாங்கவில்லை என்றால் ஞாபகம் இல்லை.

(8) வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தியதற்கு பிறகு என் பெயருக்கு சிட்டா, பட்டா, அடங்கல் போன்ற வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்து ஆவணங்களை இந்த

வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சிட்டா, பட்டா, அடங்கல் பெற்றுள்ளோம் ஆனால் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. செல்வாம்பாள் வகையறாவிடம் பு.ஏ. 1.52 1/4 பூமி உள்ளதால் அவர்கள் இந்த வழக்கில் அவசிய கட்சிக்காரர்கள் என்றால் சரியல்ல. அவர்களை இந்த வழக்கில் கட்சி சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் அசலை தாக்கல் செய்யாமல் சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை.

பிரதிவாதி தரப்பில் தொடர் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

ஒப்பம்/–கோ.விஜயகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்